பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; ...

ஏசாயா 9:6

செய்தி மலர்
2015
டிசம்பர்

இதழ் : 7
மலர் : 16



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்கட்கு கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!.

தேவனுடைய பெரிதான கிருபையால் இந்த 2015ஆம் வருடத்தின் கடைசி மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை நாம் பெற்றிருக்கிறபடியால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

இந்நாள் வரையிலும் தமது கிருபையால் நம்மை காத்து வந்தபடியாலும், நம் சபையின் ஆராதனைகள், ஊழியங்கள்,மற்றும் நமது குடும்ப வாழ்க்கையிலும், தேவ பிரசன்னம் இருந்தபடியால் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

விசேஷமாக கடந்த மாதத்தில் சபையின் 39ஆவது ஆண்டு விழாவையும் சிறுவர் வேதாக பள்ளி 13 ஆவது அண்டு விழாவையும் காணச் செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். சபையின் மூலம் குவைத் தேசத்தில் வந்து ஊழியம் செய்து போன போதகர் ஜெபசுந்தருக்காக நன்றி செலுத்துவோம்.

இந்த வருடம் இந்த மாதம் வரை நாம் சொல்லுகிற படியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் நம்மோடு இருந்து நம்மை நடத்தி வருகிறார்.

வருடத்தின் டிசம்பர் மாதம் வந்தாலே, உலகமெங்கும் எல்லா சபைகளிலும் பாடல் ஆராதனைகள். விசேஷித்த கூட்டங்கள் என்று ஒரே கோலாகலமாக மாறிவிடும். ஏனெனில் உலக இரட்சகராகிய கிறிஸ்து இயேசு உலகில் பிறந்தார் என்று நினைவு கூறுகிறோம். கிறிஸ்மஸ் என்று கொண்டாடி மகிழ்கிறோம். ஆனால் தேவ குமாரன் உலகில்வந்த நோக்கம்.

1 . .பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.(1 யோவான் 3:8)

இயேசு உலகில் வந்ததின் நோக்கம், நம்மில் உள்ள பிசாசின் கிரியைகள் அழித்து தேவ கிரியை நம்மூலம் வெளிப்பட வேண்டும் என்பதற்காக உலகில் வந்தார். கிறிஸ்மஸ் என்றாலே சாப்பாடு, விருந்து என்று எண்ணுகிறவர்கள். உண்டு, கிறிஸ்துவை அறிந்தவர்கள், கூட உலக மனிதர்களை போல கிறிஸ்மஸ் என்றாலே மதுபானம் கேளிக்கை என்று எண்ணுகிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் பிசாசின் கிரியைகள், இவைகளை அழிக்கும்படிதான் தேவ குமாரன் உலகில் வந்தார். உண்மையில் கிறிஸ்மஸ் கொண்டாடுகிறோம் என்றால், பிசாசினால் உண்டான கேளிக்கைகள் பரியாசங்கள்,துன்மார்க்க கிரியைகள்

எல்லாவற்றையும், ஜெயித்தவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல் இப்பொழுதே அவைகள் தவறு என்று நாம் உணர்ந்தால் அவைகளை ஜெயிக்க அவர் கிருபை தருவார்.

2. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் (I தீமத்தேயு 1:15)

அப்போஸ்தலனாகிய பவுல், பாவிகளில் பிரதான பாவி நான் என்று சொல்லுகிறார். ஒரு மனிதன் தன்னை பாவி என்று ஒப்புக்கொள்ளும் போது,அவர்களை இரட்சிக்கிறார். எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாய் போனார்கள். ஆனால் எந்த மனிதனையும் பிரகாசிக்கப் பண்ணுகிற ஒளியாய் இயேசு உலகில் வந்தார். பாவம் இருளுக்கு சமம். வாழ்க்கையில் இருளுக்குள் இருக்கிறதை போல பாவத்திற்குள் மூழ்கி இருக்கும் ஒவ்வொருவரையும் மீட்க இயேசு உண்டு. இந்த கிறிஸ்மஸ் உங்கள் வாழ்க்கையில் பாவமாகிய இருளில் இருந்து, உங்களை மீட்டு கொண்டதாய் மாறுவதாக ! உயிர்த்தெழுந்த இயேசு இப்பொழுதும் அருகில் உண்டு.

பிரியமானவர்களே உங்களுக்கு விரோதமாய் கிரியை செய்யும் பிசாசின் கிரியைகளை அழித்து நீங்கள் மூழ்கி கொண்டிருக்கும் பாவத்தில் இருந்து இரட்சிக்கும்படி தேவன் விரும்புகிறார். ஆனபடியால் தம்முடைய சொந்த குமாரனாகிய இயேசுவை உலகில் அனுப்பினார். பாவத்தில் மூழ்கியிருந்த சகேயுவின் வீட்டிற்குள் இயேசு வந்தார், இன்று இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது என்றார். (லூக்கா 19:9)

மற்ற ஆட்டாபாட்டங்களை காட்டிலும் இயேசுவை வீட்டிற்குள் அனுமதிப்போம் அதற்காகவே அவர் உலகில் வந்தார். உங்கள் ஒவ்வொருவருடைய வீடும் இயேசு தங்கும் வீடாய் , இரட்சிக்கபட்ட வீடாய் மாறுவதாக !

அன்பின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.!

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் எபிநேசர் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. ஆரோக்கியராஜ் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவண்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

## தேவகுமாரன்

**"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்..."**

**(ஏசா9:6)**

பிரியமானவர்களே! இயேசுவானவர் இவ்வுலகத்தில் பாலகனாகப் பிறந்து குமாரனாக வளர்ந்து தம்முடைய பிதாவினுடைய சித்தத்தையும் ஊழியத்தையும் நிறைவேற்றினார். இந்த தேவகுமாரன் மூலமாக நமக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்களை இங்கு சற்று தியானிப்போம்.

### 1. தேவகுமாரன் பிதாவாகிய தேவனை நமக்கு வெளிப்படுத்தினார்..

ஆம் தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை. அவர் மடியிலிருந்த ஒரே பேரான குமாரன்தான் அவரை இவ்வுலகத்திற்கு வெளிப்படுத்திதானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்ற சத்தியத்தை நமக்கு வேதத்தின் மூலமாய் வெளிப்படுத்தினார்.

"என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்" என்றும் "நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறார்"என்றும் இயேசு பிலிப்புவிற்கு வெளிப்படுத்தினார் (யோவான் 14:9-10).பிதாவைக் குறித்ததான இந்த வெளிப்பாட்டை நமக்கு காண்பிக்கவே இயேசு தேவ குமாரனாக இவ்வுலகத்தில் அவதரித்தார். இது நமக்கு கிடைத்த பெரிய பாக்கியமல்லவா!

### 2. தேவகுமாரன் நம்மை இரட்சிக்கிறார் (யோவான் 3:16)

தேவன் உலகமக்களாகிய நம் யாவர் மேலும் அளவு கடந்த அன்பு வைத்ததினால் நாம் ஒருவரும் துன்மார்க்கமாய வாழ்ந்து நரகத்திற்கு போகக்கூடாது என்பதற்காக தேவகுமாரனை இவ்வுலகத்திற்கு மனிதனாக அனுப்பி நம்மை இரட்சித்தார். இவ்வசனத்தில் இவ்வளவாய் அன்பு கூர்ந்தார் என்றபதம் தேவனது அன்பின் ஆழத்தையும் அகலத்தையும் நீளத்தையும் காட்டுகிறது. ஒருவன் எப்படிப்பட்ட பாவியாயிருந்தாலும் தேவகுமாரனை அவன் விசுவாசிக்கும் போது இரட்சிக்கப்படுகிறான். அவர் நம்மை ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தாமல் இரட்சிக்கவே உலகிற்கு வந்தார் (யோவான் 3:17-18)

### 3. தேவகுமாரன் பாவ அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்கிறார் (யோவான் 8:36)

இரட்சிக்கப்பட்ட பிறகும் பலர் பாவத்திற்கு அடிமைகளாக இருக்கின்றனர். கண்களின் இச்சை மாம்சத்தின் இச்சை ஜீவனத்தின் பெருமை போன்ற

 பாவங்களில் அடிக்கடி பிடிபட்டு விடுதலைப் பெற முடியாமல் தவிக்கின்றனர். இப்படிப்பட்ட பாவ அடிமைத் தனத்திலிருந்து நாம் விடுதலை பெற்று வெற்றி வாழ்க்கை வாழவே தேவ குமாரன் வெளிப்பட்டார்.

## 4. தேவகுமாரன் பொல்லாத ஆவிகளின் கட்டுகளினின்றும் நோய்களின்றும் நம்மை விடுவிக்கிறார் (மாற் 5:7)

நம்மைக் காட்டிலும் பிசாசுகள் தேவ குமாரனை நன்கு அறிந்திருக்கின்றன. பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவகுமாரன் வெளிப்பட்டார் (1 யோ 3:8). நம்மைப் பிடித்திருக்கிற பிசாசின் கட்டுகள் எல்லாவற்றினின்றும் கட்டவிழ்க்க வல்லவர் இயேசு. அதற்காகவே அவர் தேவ குமாரனாக வெளிப்பட்டார். அவர் பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனாயிருக்கிறார் (ரோ 1:5). ஆகவே நம் நோய்கள் எதுவாக இருந்தாலும் டாக்டர் ரிப்போர்ட் என்ன சொன்னாலும் கலங்க வேண்டாம். தேவகுமாரன் எல்லா நோய்களினின்றும் நம்மை விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.

## 5.தேவகுமாரன் தம்முடைய சாயலுக்கு ஒப்பாக நம்மை மாற்றுகிறார் (ரோ 8:29)

தேவன் நம்மை இரட்சித்ததின் நோக்கம் அவருக்கு ஒப்பான சாயலை நமக்கு அணிவித்து அவரோடே கூட ஆளுகை செய்ய வேண்டுமென்பதற்காகவே. இதை அறிந்தவர்களாய் நாம் அவர் குண நலன்களைக் கொண்டு உலக மக்கள் முன்பாக நற்கந்தங்களாய் இயேசுவின் வாசனையை வீசுவோம். நம்மைப் பார்க்கிறவர்கள் நம்மில் தேவகுமாரனைக் காணட்டும். நம்முடைய சொந்த முயற்சியால் இது முடியாதுதான் ஆயினும் தேவ குமாரன் மேல் அதிகமான அன்பும் விசுவாசமும் நாம் வைக்கும் போது அவர் தம்முடைய இரக்கத்தின்படியும் தயவின்படியும் நம்மை அவருடைய சாயலுக்கு ஒப்பாக மாற்ற வல்லவராயிருக்கிறார்.

பிரியமானவர்களே! இந்த வருடகிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுகிற நாம் பரம பிதாவினால் நமக்குக் கொடுக்கப்பட்ட தேவ குமாரனை அறிந்தவர்களாய் அவரை விசுவாசித்து தரிசித்து அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோமாக. ஆமேன்!

சபையோர் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

பிரியா பிரேம்குமார்

## ஜெபத்தில் இயேசு

நாம் இயேசுவுடன் ஜெபத்தின் வழியாக இணைந்திருந்தால் நாம் நல்ல கனிகளைக் கொடுப்போம். தேவனோடு கூடிய இணைப்புக்கு "ஜெபம்"' சரியான பாதையாய் அமைகிறது. பிதா தோட்டக்காரராக இருக்கிறார். இயேசு அதில் திராட்ச செடியாய் இருக்கிறார். நாமோ திராட்ச செடியில் கிளைகளாக இருக்கிறோம். திராட்ச செடியாய் இருக்கிற இயேசு நமக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்திருக்கிறார். பூமியில் நாம் செய்யும் ஜெபத்தை விண்ணில் சேர்ப்பதற்கான திறவுகோலையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். இயேசுவும் நாம் எப்படி ஜெபிக்க வேண்டும் எவைகளுக்காக ஜெபிக்க வேண்டும் என்று நமக்கு கற்றுத் தந்திருக்கிறார். அதை நாம் வேதத்தில் அறிந்து கொள்கிறோம். அதுமட்டுமல்லாது இயேசுவே அதற்கு முன்மாதிரியாகவும் இருந்திருக்கிறார்.

மரித்த லாசருவை இயேசு கல்லறையினின்று எழுந்திருக்கச் செய்யு முன்பு இயேசுவும் ஜெபித்தார் என்பதை நாம் வேதத்தின் ஊடாய் விளங்கிக் கொள்ள முடிகிறது (யோவா. 11:41-44). இயேசு தன் அண்டையில் வந்த ஜனங்களை போஷிப்பதற்காக, அவரிடம் கொடுக்கப்பட்ட 5 அப்பம் மற்றும் 2 மீன்களையும் இயேசு பெற்றுக் கொண்டு ஜெபித்துதான் அவைகளை ஆயிரங்களாய் பெருகப்பண்ணினார் என்பதையும் நாம் புரிந்து கொள்ள முடிகி-றது. ஜெபிக்கின்ற பொழுது உதட்டளவில் ஜெபிக்காமல் விழித்திருந்து (கருத்தாய்) ஜெபியுங்கள் என்றும் இயேசு நமக்கு கற்றுத் தருகிறார் (மத். 26:36-41). இயேசு பாடுகளின் ஊடாய் கடந்து செல்லும் பொழுதும் அவர் தனக்காய் மட்டும் ஜெபிக்காமல், நீங்கள் சோதனைக்கு உட்படாதபடி விழித்திருந்து ஜெபியுங்கள் என்றும் நமக்கு சொல்லித் தந்திருக்கிறார். நம்முடைய ஜெபங்கள் நம்முடைய பாவ பலகீனத்தினிமித்தம் நம்மிடமே திரும்பி வந்துவிடாதபடி, நமக்காக இயேசு பிதாவிடம் பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார் (யோவா. 17:1-26).

நாம் அநேக வேண்டுதல்களோடும் விண்ணப்பங்களோடும் ஜெபிப்பதற்கு இயேசு கிறிஸ்தும் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியை நமக்குத் தந்து ஜெபிக்க உதவியும் செய்கிறார். ஜெபிப்பதற்கு குறித்த நேரம் காலம் கிடையாது. எப்பொழுதும் ஜெபிக்கும்படியான உரிமையை தேவன் நமக்குத் தந்திருக்கிறார் (சங். 55:17). நம் தேவனும் நமக்காக உறங்காது தூங்காது நம் ஜெபத்தை கேட்பவராகவும் இருக்கிறார். இயேசுவோடு இணைந்து ஜெபித்து ஜெயம் பெற்று வாழ தேவன் தாமே நமக்கு துணை செய்வாராக. ஆமென்.

# விசுவாசத்தினாலே வரும் பெலன்

விசுவாசத்தினாலே சாராளும் வாக்குதத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்றெண்ணி, கர்பந்தரித்து பெலனடைந்து வயது சென்றவளாய் இருந்தும் பிள்ளை பெற்றால்.

"என் பெலனானவர் கர்த்தர்" என்பதே சாராளுடைய அசாத்திய விசுவாசமாயிருந்தது.

பிள்ளை பேறு மகா வேதனையான காரியம்! அதிலும் வயது சென்று, சரீரம் செத்து,வழிபாடு நின்று போய் விட்ட முதிர்வயதுள்ளவள் பிள்ளை பெற பெலனடைகிறாள், என்றாள் அது அதிசயமே! விசுவாசத்தால் உண்டாகும் பெலனை இச்சம்பவம் உறுதிபடுத்துகிறது!

எபிரேயர் 11 ஆம் அதிகாரத்திலுள்ள விசுவாச வீரர்களின் பட்டியல்கள் எல்லாவற்றையும் வாசித்து பாருங்கள். எல்லோரும் பெலவீனர்கள்தான் : சாதாரணமானவர்கள்தான்,ஆனால் யார் யார் ஆண்டவரைத் தங்கள் பெலனானவராகக் கொண்டார்களோ அவர்களெல்லாரும் பெலவீனராயிருந்தும் விசுவாசத்தால் பெலன் கொண்டார்கள்.

விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெபித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள், வாக்குதத்தங்களைப் பெற்றார்கள்.சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயகருக்குகளுக்கு தப்பினார்கள். பலவீனத்தில் பலன் கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவரானார்கள். அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்.(எபி 12:33,34)

ஆம் நமது கர்த்தர் "இஸ்ரவேலின் ஜெயபலமானவர் " (1சாமு 15:29) நமது பெலனானவர் அவரே! நமக்காக வழக்காடுபவர் அவரே! நமக்காக யுத்தம் செய்து நம்மை வெற்றிசிறக்க பண்ணுபவர் அவரே!.

தேவ பிள்ளைகளே உன்னை பெலவீனன் என்று எண்ணாதே ! தாழ்வு மனப்பாண்மையால் சோர்ந்து போகாதே! கிறிஸ்துவின் உன்னத பெலனை நோக்கி பார்த்து பெலன் கொள்வாயாக ! பலமுள்ளவர்களை வெட்க்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளை தெரிந்த கொண்டார் ( 1கொரி 1:27)

பெலன் கொள்வாயாக உன்னை குழந்தை என்று சொல்லாதே! தேவரீர் உன்னுடைய சத்துருக்களின் நிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினார். (சங் 8:2) ஆம் பாலகரின் வாயில் வார்த்தைகள் மூலமாகவும் தேவன் மகா பெரிய பெலனை கட்டளையிடுகிறவர், அவரின் உன் முழு பெலத்தோடு அன்பு கூறுவாயாக !(லூக் 10:22) செய்யும்படி உன்கைக்கு நேரிடுவது எதுவோ அதை உன் பெலத்தோடு செய் (பிர 9:10) அப்பொழுது நீ பெலத்தின் மேல் பெலனடைவாய்.!

ஆமென் !மரணஅலைகள் என்னைச் சூழ்ந்துகொண்டு, துர்ச்சனப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது. பாதாளக் கட்டுகள் என்னைச்

சூழ்ந்துகொண்டது: மரணக்கண்ணிகள் என்மேல் விழுந்தது. எனக்கு உண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அவர் செவிகளில் ஏறிற்று (2சாமு. 22:5-7).

உபத்திரவப்பட்டவனுடைய உபத்திரவத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார் (சங். 22:24).
ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு: நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய் (சங். 50:15).

ஜனங்களே, எக்காலத்திலும் அவரை நம்புங்கள்: அவர் சமுகத்தில் உங்கள் இருதயத்தை ஊற்றிவிடுங்கள்: தேவன் நமக்கு அடைக்கலமாயிருக்கிறார் (சங். 62:8).

அவர்கள் கூப்பிடுதலை அவர் கேட்கும்போதோ, அவர்களுக்கு உண்டான இடுக்கத்தை அவர் கண்ணோக்கி, அவர்களுக்காகத் தமது உடன்படிக்கையை நினைத்து, தமது மிகுந்த கிருபையின்படி மனஸ்தாபப்பட்டு, (சங். 106:44,45).
என் முழு இருதயத்தோடும் உம்மைத் தேடுகிறேன், என்னை உமது கற்பனைகளைவிட்டு வழிதப்பவிடாதேயும் (சங். 119:10).

கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள்: அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள் (ஏசா. 55:6).

உமது நாமத்தை நோக்கிக் கூப்பிடுகிறவனும், உம்மைப் பற்றிக்கொள்ளும்படிக்கு விழித்துக்கொள்ளுகிறவனும் இல்லை: தேவரீர் உம்முடைய முகத்தை எங்களை விட்டு மறைத்து, எங்கள் அக்கிரமங்களினிமித்தம் எங்களைக் கரையப்பண்ணுகிறீர்(ஏசா. 64:7).

உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள் (எரே. 29:13).

எழுந்திரு, இராத்திரியிலே முதற்சாமத்தில் கூப்பிடு: ஆண்டவரின் சமுகத்தில் உன் இருதயத்தைத் தண்ணீரைப்போல ஊற்றிவிடு: எல்லாத் தெருக்களின் முனையிலும் பசியினால் மூர்ச்சித்துப்போகிற உன் குழந்தைகளின் பிராணனுக்காக உன் கைகளை அவரிடத்திற்கு ஏறெடு (புல. 2:19).

நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம். நாம் நம்முடைய கைகளோடுங்கூட நம்முடைய இருதயத்தையும் பரலோகத்திலிருக்கிற தேவனிடத்திற்கு ஏறெடுக்கக்கடவோம் (புல. 3:40-41).

நீங்கள் இப்பொழுதே உபவாசத்தோடும் அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவே. 2:12).

இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது என்றார் (மத். 17:21).

ஆமென்
அல்லேலூயா!

## 2015 – நவம்பர் மாத விடைகள்

1. சாலமோன் – II நாளாகமம் 7:1
2. யோதாம் – II நாளாகமம் 27:3
3. உசியா– II நாளாகமம் 26:10
4. கர்த்தருடைய. II நாளாகமம் 16:9
5. யோராம் – II நாளாகமம் 21:30
6. எசேக்கியா– II நாளாகமம் 32:33
7. ஆசா – II நாளாகமம் 16:14
8. மனாசே II நாளாகமம் 33:20
9. உசியா – II நாளாகமம் 29:19
10. சேரா – II நாளாகமம் 14:9
11. யோசபாத் – II நாளாகமம் 17:9
12. சாலமோன் – II நாளாகமம் 6:3
13. எசேக்கியா – II நாளாகமம் 32:30
14. அத்தாலியாள் – II நாளாகமம் 22:23
15. உசியா – II நாளாகமம் 27:3

## 2015 நவம்பர் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. சாந்தி
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. மெர்சி ஜாண்ஸன்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. மரியா குளோரி தாஸ்
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. லீம்சியா

Bro. ஜாண்ஸன்
Bro. கிறிஸ்டோபர். M
Bro. ஆல்பர்ட்

## "உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்." (சங்கீதம்– 128:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. அனுஷா செலஸ்டி
செல்வி. கிரேஸ்லின் சாம் ஞானதுரை
செல்வி. லிடியா ஜான் வெஸ்லி
செல்வி. கவிதா கொம்மையன்
செல்வி. நயோமி ராமர்

செல்வன். சாமுவேல் ஜோசப் ஜாண்
செல்வன். ஷிஜு பால்
செல்வன். ஜாண்சன் ராஜவேல்
செல்வன். ஜோயல் ஜஸ்டின்
செல்வன். ஜாக் சாமுவேல் ஜாண்சன்
செல்வன். பிரின்ஸ் ஜோசப் பிரேம்குமார்
செல்வன். பென்ஜமின் ராமர்
செல்வன். பிரவீன் ஜெயச்சந்திரன்
செல்வன். அலெக்சாண்டர் அந்தோனி சாமி

சகோதரி. ஷீபா ராணி வெங்கடேஷ்
சகோதரி. சசிகலா ராமர்
சகோதரி. கிளாடிஸ் பாப்பி சிவகுமார்
சகோதரி. ஷீஜா ஸ்டீபன்
சகோதரி. சசிரேகா சதீஸ்குமார். E
சகோதரி. ஜீனா சதீஸ்குமார்
சகோதரி. கிறிஸ்டிலின் ஜோயல்
சகோதரி. கிறிஸ்டீனா முத்தையா

சகோ. சாமுவேல் ஜாண்சன்
சகோ. சிவகுமார்
சகோ. ஆல்வின் முத்தையா
சகோ. எட்வின் சாம் ஞானதுரை
சகோ. அலெக்சாண்டர் அந்தோனி சாமி

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி / திரு. தாஸ் – திருமதி / திரு. கிறிஸ்டோபர்
திருமதி /திரு. ஸ்டீபன். T - திருமதி / திரு. ஜாண்சன்
திருமதி / திரு. ஆல்வின் – திருமதி / திரு. ஜெபசிங்
திருமதி / திரு. வேலு ராமர் – திருமதி / திரு. பால் அறிவுச்சுடர்

## 2015 ஆம் ஆண்டின் சபையின் வாக்குத்தத்தம்

..நீங்கள் சொல்லுகிறபடியே சேனைகளின் தேவனாகிய கர்த்தர் உங்களோடே இருப்பார்

(ஆமோஸ் 5:14)

# 2015 டிசம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/12/2015 | சகோ.ஸ்டாலின் | சகோ. ஐசக் துரை |
| 13/12/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ.அசோக்குமார் |
| 20/12/2015 | சகோ.ஆரோக்கியதாஸ் | சகோ.சுகுமார் |
| .27/12/2015 | சகோ.ஜஸ்டின் சுந்தரராஜ் | சகோ. அற்புதராஜ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| .04/12/2015 | பாடகற் குழுவின் கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனை | |
| 11/12/2015 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| .18/12/2015 | ஐக்கிய திருச்சபைகளின் பாடல் ஆராதனை | |
| 25/12/2015 | கிறிஸ்துமஸ் ஆராதனை<br>செய்தி : சுநஎ. ர்யசசளைழஎ ஊாைெைமரஅயச | |
| 01/01/2016 | புதுவருட ஆராதனை | |

11/12/2015 வெள்ளியன்று காலை உபவாச திருவிருந்து ஆராதனை நடைபெறும்

இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் காலை 9:00மணிக்கு

31/12 /2015 அன்று

வாக்குத்தத்த ஆராதனை

நேரம் இரவு 10:00 முதல் – அதிகாலை 1:30 மணி வரை

இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு

# 2015 டிசம்பர் மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. பெலிஸ்தரின் வெள்ளான்மையை சுட்டெரித்து போட்ட நியாதிபதிகள் யார்?
2. ஒரு கழுதையின் பச்சை தாடை எலும்பால் பெலிஸ்தரில் ஆயிரம் பேரைக் கொன்றவன் யார்?
3. ஒரு தாற்றுக்கோலால் பெலிஸ்தரில் அறுநூறு பேரை முறியடித்தவன் யார்?
4. ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை சங்கரித்த நியாயாதிபதி யார்?
5. பரஸ்திரியின் குமாரன் ஆனாலும் விசுவாச வீரன் இவன் யார்?
6. தன் வேலைக்காரன் பட்டயம் உருவி குத்தினதால் செத்து போன ராஜா யார்?
7. நூதன தேவர்களை தெரிந்து கொண்டவர்கள் யார்?
8. புறஜாதிகளுடைய பட்டனமாகிய ஆரோசேத்திலே குடியிருந்த சேனாதிபதி யார்?
9. போர்களத்து முனையில் தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்கு துணிந்து நின்ற இருவீரர்கள் யார் யார்?
10. கர்த்தர் தன்னை விட்டு விலகினதை அவன் அறியாதிருந்தான் அவன் யார்?
11. பலி பீடத்தின் ஜீவாலையில் வானத்துக்கு ஏறிபோனவர் யார்?
12. முந்நூறு நரிகளை பிடித்தவன் யார் ?
13. ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் அவள் யார்?
14. புது கயிறுகளால் கட்டப்பட்டவன் யார்?
15. இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும் இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய் போயின என்றவள் யார் ?

விடைகளை வருகின்ற 18-12-2015 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது வாட்ஸ்ஆப்ஸிலோ (whatsApps # 66015503 - with Name ) அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை "**நியாதிபதிகள்**"புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

**– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –**

மத்தேயு 7:7

# இந்தியாவுக்கு இயேசு சொந்தமானவரா?

பிரியமான சகோதர சகோதரிளே இந்த அருமையான சந்தர்பத்தில் அதாவது ஆண்டவருடைய பிறப்பை கொண்டாடுகிற இந்த மாதத்தில் இந்த கட்டுரையை தொகுத்து வழங்குவதில் கிறிஸ்துவுக்குள் பெரு(மை)மகிழ்ச்சி அடைகின்றேன்

இந்தியாவுக்கு இயேசு சொந்தமானவரா? என்றால் ஆம் அப்படிதான் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். பரிசுத்த வேதாகமும் சாட்சியிடுகிறது. இந்தியாவின் பெயர் கிறிஸ்தவ வேதத்தில் இரண்டு இடங்களில் எழுதப்பட்டுள்ளன. அமெரிக்கா. ஆஸ்திரிரேலியா போன்ற பெரிய தேசங்களில் பெயர்கள் கூட வேதத்தில் எழுதப்படவில்லை.(எஸ்தர் 1:1:8:9)கிமு ஆம் நூற்றாண்டு வாக்கில் இந்தியா உட்பட நூற்று இருபத்தேழு நாடுகளில் தன் ஆதிக்கத்தை செலுத்திய பெர்சியா தேசத்து பேரரசனாகிய ஆகாஸ்வேரு ராஜா, சேர நாட்டு பேரழகியாகிய வஸ்தியை திருமணம் செய்திருந்தார் என்று வேதாகமமும் வரலாற்று ஆசிரியர்களும் கூறுகிறார்கள்.

நூற்று இருபத்தேழு நாட்டு சிற்றரசர்கள் பிரதானிகளும் கூடியிருந்த சபையில் பட்டத்து ராணியாகிய வஸ்தியின் அழகை யாவருக்கும் காட்ட வேண்டுமென்று (அரைகுறை ஆடையில்) பணிக்கப்பட்ட போது ராணியாகிய வஸ்தி ராஜா ம்டுமே காணத்தகும் மேனியை மாற்றாரின் கண்ணுக்கு விருந்தாக்க (நமது நாட்டு கலாச்சாரத்தின்படி) மறுத்ததால் பட்டத்து ராணி என்ற அந்தஸ்தை இழந்தாள். எஸ்தர் என்ற யூத அழகி பதிலாக தேர்ந்தெடுக்கபட்டாள் என்ற (எஸ்தர் 2:1-8) வேத சரித்திரத்தில் இந்தியாவின் பெயரை வெளிபடுத்துகிறது.

கிறிஸ்தவ வேதத்தில் அதிகமும் பேசப்பட்ட ஆபிரகாமியின் முதலாவது மனைவி சாராளின் பிள்ளைகள் யூதர்களாகவும் (எபிரேயர்) அவரது எகிப்திய மனைவி ஆகாரின் பிள்ளைகள் இன்றைய இஸ்லாமிய சந்ததியாயும் அவரது மூன்றாவது மனைவியான கேத்துராளுக்கு பிறந்த பிள்ளைகள் கிழக்கு தேசத்தை நோக்கி வந்து குடியேறிய (ஆதி 25:1-7) சிந்து சமவெளியில் வாழ்ந்த திராவிட இனத்தவர்கள் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (ஆதாரம் முத்தாரம் 18.8.1995 திராவிடர்கள் யூதர்களே ஆராய்ச்சி கட்டுறை) ஆகவேதான் யூத மரபில் பிறந்த இயேசுவுக்கும் இந்தியருக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

மட்டுமல்லாமல் இயேசு பிறந்த பொழுது வானத்தில் ஒரு நட்சத்திரம் தோன்றி **"யூதருக்கு ராஜா"** பிறந்திருக்கிறார் என்று வெளிபடுத்தியது. அந்த நட்சத்திரத்தை கண்டு கீழ் தேசத்திலிருந்து வான சாஸ்திரிகள் வந்த அந்த தெய்வக் குழந்தையை பணிந்து கொண்டதாக பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. (மத் 2:1-11) அந்த சாஸ்திரிகள் சேர சோழ பாண்டியர்களின் பிரதிநிதிகளே என்றும் நமது நாடே உலகில் வான ஸ்தாத்திரத்தில் ஆதிகாலம் தொட்டு தேர்ச்சி கொண்டதாக விளங்கி வந்ததும் பிரபல்யம். இது சரித்திர வல்லுநர்களின்

அபிப்பிராயம் மட்டுமல்ல அவரை(இயேசுவை)சாஸ்திரிகள்பணிந்து கொண்ட விதமும் இந்திய முறைபடி(குப்பிற விழுந்து) இருந்ததால் இந்த சாஸ்த்திரிகள் தென்னிந்தியாவை சேர்ந்த சேர சோழ பாண்டிய ராஜாக்களின் பிரதிநிதிகளே என்பதும் பிரசித்தமாயிற்று.

இயேசு கிறிஸ்து தான் பிறந்த பொழுது இந்தியர்கள் வந்து தன்னை தொழுது கொண்டதை கனப்படுத்த தனது 12 சீஷர்களில் ஒருவராகிய பரிசுத்த தோமாவை முதலாம் நூற்றாண்டிலேயே இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். பரிசுத்த தோமா கடல் மார்க்கமாக கிபி 52ல் இந்தியா வந்து கேரளாவில் கிரேங்கனூர் என்னும் துறைமுகத்தில் இறங்கினார். அப்பொழுது கந்த பெருமாள் என்ற சோழ ராஜா அப்பகுதியை ஆண்டு வந்தார். தோமா ஊருக்குள்பிரவேசிக்கும் போது அரண்மனையில் ஒரு திருமணம் நடந்துகொண்டிருக்க திருமணத்தில் நடன கோஷ்டிகளின் முழக்கத்தை ஆர்வமுடன் கவனித்த தோமா அங்கேயே அமர்ந்து விட்டார். அழையாமல் நுழைந்துவிட்ட தோமாவை மந்திரி ஒருவர் தோமாவின் கண்ணத்தில் ஓங்கி அறைந்து விட்டான், ஆகவே தோமா வெளியேறிவிட்டார். அடுத்த நாளில் அடித்தவனுடைய கையை ஒரு நாய் கௌவிக்கொண்டு வந்து கொலு மண்டபத்தில் போட்டது. இது பரிசுத்த தோமாவை கண்ணத்தில் அறைந்த மந்திரியின் கை என்று மன்னன் அறிந்து தோமாவிடம் மன்னிப்பு கேட்டார். பரிசுத்த தோமா தன்னை அடித்த அந்த மந்திரியை வரச்சொல்லி அந்த கையை அவர் சரீரத்தில் பொருத்தி சுகமாக்கினார். இந்த அற்புதத்தை கண்டு தோமா பிரசிங்கித்த இயேசுவை ராஜா சோழ பெருமாள் ஏற்றுக்கொண்டார். ஏற்று கொண்டதுமட்டுமல்ல ஞாஸ்தானம் பெற்று கிறிஸ்தவரானார்.

இந்தியாவில் முதல் முதல் கிறிஸ்தவரானவர் படிக்காத பாமரனே,கீழ்சாதிக்காரனோ அல்ல, கீர்த்தி பெற்ற சோழ பெருமாள் ராஜா என்பது சரித்திர உண்மை. அதன் பின் பரிசுத்த தோமா பாலையூரில் ஏழு குடும்பங்களை சேர்ந்த நம்பூதிரி பிராமணர்களுக்கு ஞானஸ்தானம் கொடுத்து பின் கடற்கரையோறமாக பிரயாணம் செய்து சென்னை பட்டணம் வந்து சேர்ந்தார் அப்பொழுது கந்தப்ப ராஜா என்பவர் சென்னையை ஆண்டுகொண்டு இருந்தார்.

அந்த சமயத்தில் வங்காள விரிகுடாவில் ஒரு பெரிய தேக்கு மரம் மிதந்து கொண்டு வந்தது. அதை யானைகள் கட்டி இழுத்தும் கரைக்கு கொண்டுவர முடியாததால் தோமாவை ராஜா அழைத்தார். பரிசுத்த தோமா ஒரு ஜெபம் செய்துவிட்டு அந்த தேக்கு மரத்தின் மேல் ஒரு சிலுவை அடையாளம் போட்டுவிட்டு தனது இடுப்பு கச்சையில் மரத்தை கட்டி இழுத்துக்கொண்டு வந்துவிட்டார். இதனால் கந்தப்ப ராஜா மனம் மகிழ்ந்து அவரது தெய்வீக சக்திக்கு கட்டுபட்டு தனது மூத்த குமாரனுக்கு பாடம் கற்று கொடுக்கும் ஆசானாக வைத்து கொண்டார்.

(வரலாறு இன்னும் தொடரும்)

# சாமுவேல் சுவேமேர் (1867 – 1952)

பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இஸ்லாமியர்கள் வாழும் நாட்டிற்கு சென்று மிஷனெரிப் பணியை நிறைவேற்றினவர் சாமுவேல் சுவேமேர். இஸ்லாமியர்களின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்பட்ட இவர், 1867–ம் ஆண்டு ஹாலந்துக்கு அருகிலுள்ள மிக்சிகன் என்ற இடத்தில் பிறந்தார். சீர்திருத்தத் திருச்சபையின் போதகரான இவரது தகப்பனாருக்கு, 13–வது மகனாகப் பிறந்தார். கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்ட இவர் மிஷனெரிப் பணியில் அதிக ஆர்வம் காட்டினார். இவரது சகோதரர்களிலும் 4 பேர் தேவப்பணி செய்தனர். இவரது சகோதரி நெல்லி சுவேமேர் என்பவரும் நாற்பது வருடங்கள் சீனா தேசத்தில் மிஷனெரியாக உழைத்தவர். ஹோப் கல்லூரியில் படித்த நாட்களில் வெளிநாடுகளில் மிஷனெரிப் பணியின் அவசரத்தேவையை உணர்ந்த இவர் தனது இறுதியாண்டுப் படிப்பின்போது ராபர்ட் வில்டர் என்ற மிஷனெரியின் சவாலான செய்தியைக் கேட்டார். தன்னையும் ஆண்டவர் இந்த மிஷனெரிப் பணிக்காக அழைப்பதை உணர்ந்து மற்ற தனது ஐந்து தோழர்களுடன் மிஷனெரிப் பணிக்காக தனது வாழ்வை அர்ப்பணித்தார்.

கல்லூரிப் படிப்பிற்குப் பிறகு வேதத்தையும், மருத்துவத்தையும் முறையாகக் கற்றுக்கொண்ட இவர், அரபு நாட்டிற்கு மிஷனெரியாகச் செல்ல ஆர்வம் காட்டி ஜெபித்து வந்தார். இவரும் இவரது நண்பர் ஜேம்ஸ் கேன்டினும் அரேபிய நாடுகளுக்கு மிஷனெரியாகச் செல்ல முன்வந்தபோது, இவர்களை பொருளாலும், ஜெபத்தாலும் ஆதரித்து அனுப்ப எவரும், எந்த சபையும் முன்வரவில்லை. அரேபியா நாட்டில் சுவிசேஷத்தை பிரசிங்கப்பது நடைமுறையில் சாத்தியம் அல்ல என்று இவர்களை அநேகர் சோர்வடையச் செய்தனர். சாமுவேல் சுவேமேரும் அவரது நண்பரும் சேர்ந்து ஒகியோவின் கிழக்குப் பகுதியிலுள்ள சபைகளில் சென்று ஒருவர் மற்றொருவருக்காக பொருள் உதவிகளைச் சேகரித்தனர். 1889–ம் ஆண்டு ஜேம்ஸ் கேன்டின் அரேபியாவுக்குப் பயணமானார். அதைத் தொடர்ந்து 1890–ல் சாமுவேலும் அரேபியா சென்றடைந்தார். 1894–ம் ஆண்டிலிருந்து இவர்களுடைய அர்ப்பணிப்பையும், இலட்சத்தையும் கண்ட திருச்சபைத்தலைவர்கள் இவர்களதுப் பணியை ஆதரிக்கத் தொடங்கினர். பாரசீக வளைகுடாவில் இவர்கள் ஆரம்பித்த ஊழியங்களில் ஏற்பட்ட கடினமான எதிர்ப்புகள். தாமதமான முன்னேற்றம், இவைகளை எதுவும் இவர்களைச் சோர்வடையச் செய்யவில்லை. ஐந்து வருட ஊழியத்திற்குப் பின் ஏமி வில்கிஸ் என்பவரை மணம் புரிந்து எளிய குடும்பமாக வாழ்ந்தார். 1897–ம் ஆண்டு பாரசீக வலைகுடாப் பகுதியில் உள்ள பகரைன் என்ற தீவில் முஸ்லீம் மக்கள் மத்தியில் சுவிசேஷப் பணி செய்து வந்தனர். தெருக்களில் சுவிசேஷப் பிரதிகளை விநியோகித்தல், பொதுக் கூட்டத்தில் நற்செய்தியை அறிவித்தல், தனிப்பட்ட முறையில் வீடுகளைச் சந்தித்து, கிறிஸ்துவிடம் தனி நபர்களை வழி நடத்துதல் பொன்ற முறைகளில் ஊழியம் செய்தனர்.

ஊழியப் பாதையில் பல கஷ்டங்களையும், வசதியற்ற சூழ்நிலைகளையும் சந்தித்தனர். 1904–ம் ஆண்டு ஜீலை மாதத்தில் தங்களுடைய இரு சிறு மகள்களையும் (4 வயது, 7 வயது) எட்டு நாட்களுக்குள் மரிக்கக் கொடுத்தனர். இப்படிப்பட்ட வேதனையின் மத்தியிலும், தங்களுடைய ஊழியத்தில் உறுதியாக இருந்தனர். இவர்களது பணி மூலம் விசுவாசிகள் வெகு சிலரே இருந்தாலும், அவர்கள் விசுவாசத்தை அறிக்கையிடுவதில் அதிக தைரியம் கொண்டவர்களாக இருந்தனர். சிறிது காலம் விடுமுறைக்காக அமெரிக்க தேசம் சென்று மறுபடியும் பகரைன்–க்கு வந்து தனது ஊழியத்தைத் தொடர்ந்தார். தனது மனைவி இரண்டு பிள்ளைகளுடன் வளைகுடாப் பகுதியில் மிஷனெரிப் பணி செய்தபோது, இவரது பிள்ளைகளுக்கு சரியான கல்வி வசதி அங்கு இல்லாததால், இவரது மனைவி ஏமியும் பிள்ளைகளும் அமெரிக்க தேசத்தில் சில வருடங்கள் தங்க வேண்டியிருந்தது. குடும்பத்தை விட்டுப் பிரிந்து தனிமையாகப் பணிசெய்த நாட்களிலும், உற்சாகத்துடன் ஊழியம் செய்தார் சுவேமேர். 1912–ம் ஆண்டு அனைத்து இஸ்லாமிய நாடுகளில் நடைபெறும் மிஷனெரிப் பணிகளை ஒருங்கிணைத்து, அதனை வழிநடத்தும் தலைமைப் பொறுப்பை ஏற்று காய்ரோ என்ற இடத்தை மையமாக வைத்துப் பணி செய்தார். எல் அஸ்கர் என்ற பல்கலைக்கழகத்தில் இரண்டாயிரம் இஸ்லாமிய மாணவர்களுக்கு நற்செய்தி அறிவித்தார். அங்கு ஏற்பட்ட எதிர்ப்பிற்கு மத்தியிலும் சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

மாணவர் மத்தியில் சுவிசேஷப் பணி செய்ததால், இவரை காய்ரோ–வை விட்டு வெளியேற நிர்ப்பந்தம் செய்தனர். ஒரு முறை சுவேமேர் கொடுத்த சுவிசேஷப் பிரதியை வாங்கிய விரிவுரையாளர், அதனைக் கிழித்து எறிந்தார் அதனைக் கண்ட ஒரு மாணவன், இவ்வாறு நமது ஆசிரியர் கோபமாக நடந்து கொள்ளும் அளவிற்கு அதில் என்ன உள்ளது? என்ற அறிய ஆவலாய் அதனை எடுத்து ஒட்டிப் படித்தபோது கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். 17 வருடமாக சாமுவேல் சுவேமேர் காய்ரோவை மையமாக வைத்து உலகில் பல பகுதிகளுக்குச் சென்று சபைகளில் இஸ்லாமியர்கள் மத்தியில் நடைபெறும் பணிகளைப் பகிர்ந்து கொள்ளவும், ஜெப, பொருள் உதவிகளைச் சேகரிக்கவும் பலரை எழுப்பினார். தனது மீதியான நேரங்களில் இஸ்லாமிய மக்களுடன் சமமாக உட்கார்ந்து கலந்து உரையாடுதல் மூலம் சுவிசேஷத்தைச் சொன்னார். அவர்களது மதக்கருத்துக்களையும் கேட்டு, ஒரே இரட்சகரான கிறிஸ்துவை அறிவிப்பார். இப்படி வறண்ட விளைநிலமான இஸ்லாமிய உலகத்திலும் பணி புரிந்து கிறிஸ்துவுக்காக ஆத்துமாக்களைச் சேர்த்தார் சாமுவேல் சுவேமேர்.

தொகுப்பு
கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

சுகுமார்

சகோதரிகள் பகுதி

## கர்த்தரை நாம் நம்பியிருக்கிறதற்கான காரணங்கள்

**கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்.(சங் 125:1)**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளுக்கு இந்த மாத செய்திமலர் மூலமாக உங்களனைவரையும் சந்திப்பதில் கர்த்தருக்குள் மகிழச்சி அடைகின்றேன்!. ஆண்டவர் பிறப்பை கொண்டாடுகிற இந்த மாதத்தில். புசிப்பும் குடிப்பு அல்ல தேவனுடைய இராஜ்ஜியம் அதற்கும் மேலாக, நாம் ஏன் அவர் மேல் நம்பிக்கை வைத்திருக்க வேண்டும் என்று கர்த்தர் என்னுடைய அறிவுக்கு எட்டிய ஒரு 6 காரணங்களை நாம் ஆராய தேவன் கிருபை செய்வாராக!

**1. உன்னுடைய பெயரை அவர் அறிந்திருக்கிறார் (ஏசாயா 43:1)**
**"உன்னை பெயர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்**

நம் ஆண்டவர் யாக்கோபின் பெயரை முன்பே அறிந்திருந்தார் எனவே அவரை பெயர் சொல்லி அழைத்து,பயப்படாதே! உன்னை மீட்டுக்கொண்டேன் நீ என்னுடையவன் என்றார். யாககோபுக்கு கிடைத்த அந்த மீட்பு, அவனை ஆண்டவருக்கு சொந்தமாக மாற்றியது நமது பாவத்திலிருந்து நம்மை மீட்க நம் இரட்சகர் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கின்றார் அவர் நம்முடைய பெயரை, நம் தாயின் கர்பத்திலிருக்கும் போதே அறிந்து, அதை முன் குறித்த வைத்திருக்கிறார்,அத்தகைய நாம், பாவத்திலிருந்து விடுபட்டு, அவரின் மீட்பை பெற்றவர்களாய் வாழவேண்டும். பரலோக இராஜ்யத்திலுள்ள ஜீவ புத்தகத்திலும் நம் ஒவ்வொவ்வருடைய பெயரும் ஏழுதப்பட வேண்டுவது மிக அவசியமாகும். அதற்கு நாம் எச்சரிப்புடன், ஆயத்தப்பட வேண்டும்.

**2. அவர் உன்னை நினைத்திருக்கிறார் : (சங் 139:11)**
**உமது ஆலோசனைகள் எத்தனை அருமையானவைகள் அவைகளின் தொகை எவ்வளவு அதிகம்"**

அவர் நமக்கு நல்ல ஆலோசனை தருகின்ற கர்த்தர் தாவீது ராஜா இவரது ஆலோசனை மிக அருமையானது என்றும் , அவைகளின் தொகையோ மிக அதிகம் என்றும் தேவனிடம் ஆச்சரியத்தோடே கூறுகின்றார். தாவீது மாத்திரமல்ல உன்னையும் என்னையும் அவர் முன்பே நினைத்திருக்கிறார். அருமையான அவருடைய ஆலோசனைகளை நமக்கு தந்த அவருடைய பிள்ளையாக வாழ வழி செய்துமிருக்கிறார் அவருடைய ஆலோசனைகளுக்கு நாம் செவி கொடுத்து நம்முடைய உள்ளத்தை நமக்கு தந்து, அவருடைய பிள்ளையாக வாழ வழி செய்துமிருக்கிறார் இன்னும் நம் உள்ளத்தில் ஜீவிக்கிறவராக இருக்கின்றார். அவருடைய ஆலோசனைகளுக்கு நாம் செவி கொடுத்து நம்முடைய உள்ளத்தை நாம் திறந்து கொடுக்க வேண்டியது அவசியம்.

### 3. அவர் உனக்காக யுத்தம் செய்வார் : (யாத் 14:14)

கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார் நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான் "

தேவன் யுத்தத்தில் சிறந்தவர் நமக்காக அவர் யுத்தம் செய்வார். நாம் அமைதியாக இருப்பதே அவசியமாக கருதப்படுகின்றது. அன்றாட வாழ்க்கையில் வியாதியில் போராட்டமா? பாவ சோதனையா? கடன் தொல்லையா? சமாதானக்குறைவா? ஊழியத்தின் பாதையில் போராட்டமா? தேவன் நமக்கு நடுவராக இருந்து அப்போராட்டத்தில் நமக்காக யுத்தம் செய்து நமக்கு விடுதலை வாங்கி தருவதில் அவர் வல்லவராக இருக்கின்றார்.

### 4.அவர் உனக்கு அடைக்கலம் கன்மலை இரட்சிப்புமானவர். (சங் 62 :6-8)

நாம் அவரை நம்பி, அவர் சமூகத்தில் நம் இருதயத்தை ஊற்றி விட வேண்டுவது மிக அவசியமானதாக இருக்கின்றது. அவரே நமக்கு அடைக்கலம் கன்மலை, நம்மை இரட்சிக்கிறவரும் அவர் மட்டும்தான், கர்த்தரையே நாம் நம் நம்பிக்கையாக கொண்டு வாழ வேண்டும். மனிதரை நம்பினால் அவர்கள் யாவரும் நம்மை கைவிட்டுவிடுவார், ஆண்டவர் ஒருவர் மட்டும்தான் நம் மூச்சு இருக்கும் வரை நம் கூடவே அடைக்கலமாகவே இருப்பவர். எனவே நாம், அவரை மாத்திரம் பற்றிக்கொண்டு வாழ்வோம்.

### 5. அவர் உனக்காக நல்லதொரு திட்டத்தை வைத்திருக்கிறார் (எரே 29:11)

நாம் எதிர்பார்கிறதற்கும் முடிவை நமக்குக் கொடுக்கும் படிக்கு அவர் நம்பேரில் வைத்திருக்கின்ற, நல்லதொரு திட்டத்தை அறிந்து நாம் செயல்பட வேண்டும், (Short cut method)) நாம் விட்டுவிட வேண்டும், ஆசீர்வாத்தைப் பெற அவர் தீர்மானத்தின்படி நாம் பொ-றுமையுடன் காத்திருப்பது மிக அவசியமே.

### 6. அவர் உன்னோடு எப்பொழுதும் இருக்கின்றார்.: (மத் 28:20)

உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன் என்றார்."

நம் இன்பத்திலும், துன்பத்திலும், கூடவே இருப்பது, நம் மனைவியோ,கணவரோ, நம் பிள்ளைகளோ,மிக அரிதே. தேவன் மாத்திரமே எல்லா நேரங்களிலும் நம் கூடவே நமக்கு ஆறுதல் செய்கின்றவரே இருக்கின்றார்.

நம் வாழ்நாளெல்லாம் நாம், அவரைப் பற்றிக்கொண்டு வாழ வேண்டும். அவரை நம் நம்பிக்கையின் தகப்பன் தாய் எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருப்பார். நமக்கு சமாதானம் அருளுவார் இந்த ஒரே ஒரு வாழ்க்கை நாம் நம் இயேசுவிற்காக அர்பணித்து அவரை மாத்திரம் நம் நம்பிக்கையாகக் கொண்டு நாம் வாழ்ந்து, ஆசீர்வாதம் பெறுவோமாக!

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி

பிரூ ஸா பால் ஜெகநாதன்

# கடந்த மாத நிகழ்வுகளில் தங்கள் பார்வைக்கு சில



## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்


தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்

23913675 - 66889706

செயலாளர் – சகோ. ஜெயசேகர்

23711698 - 96646444

பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்

60692485

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only